ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2277/62 - 2022 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2022.04.29
*2277/62 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரி கட்டளைச் சட்டம்**

***மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2022***

போத்தலில் அடைக்கப்பட்ட கள் மீதான மதுவரித் தீர்வை

*காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான, மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி அமைச்சர் எம். யூ. எம். அலி சப்ரி ஆகிய நான் இக்கட்டளை மூலம், 2022, மே 04 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்;*

*(1) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட உரிமம் பெற்ற உற்பத்திசாலையில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள் லீற்றர் ஒன்றுக்கு ரூபா ஐம்பது (ரூ. 50/-) என்ற வீதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;*

*ஆயின் எவ்வாறாயினும், போத்தலில் அடைக்கப்பட்டு இலங்கைத் தீவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படுகின்ற மேற்குறித்த கள்ளின் எத்தகைய அளவு தொடர்பிலும் அத்தகைய தீர்வை விதிக்கப்படவோ அறவிடப்படவோ ஆகாது; அத்துடன்*

*(2) 2021, சனவரி 07 ஆந் திகதிய 2209/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 03/2021 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.*

**எம். யூ. எம். அலி சப்ரி,**
*சனாதிபதி சட்டத்தரணி,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2022 ஏப்பிறல், 29*

*05 - 0011*

1A - PG 5832 — 406 (2022/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*